# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,614 — 1958 දෙසැම්බර් 12 වැනි සිකුරාදා — 12.12.1958**

**11,614 ம் இலக்கம் — 1958 ம ஆண்டு மார்கழி மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

## பரீட்சையும் பரீட்சைப் பெறுபேறுகளும்

### இலங்கை நுண்தொழிற் கல்லூரி பிரவேசம் 1959/60 ம் வருடம்

கீழ்க்காணும் பாட முறைகளில் (பொறி இயற்பகுதி) பயிலுவதற்கு உட் பிரவேசிக்க விரும்புவோரின் விண்ணப்பப்பத்திரங்கள் 1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 3 ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி மட்டும் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கல்லூரியிலிருந்து மாசி (பெப்ரவரி) மாதம் 28ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணி மட்டும் பெறக் கூடிய குறித்த பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

பொறி இயல் பகுதியினுள்ள பல்வேறு பாட முறைகளைப் பற்றிய விபரம் அடங்கிய கைநூல்கள் இக்காரியாலயத்திலுள. இவைகளை விண்ணப்ப மூலம் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பக் காரர்கள் தங்களுக்கு வேண்டிய பிரவேசப்பத்திரம், கைநூல்களின் பிரதி கள் முதலியவைகளைப்பெற விரும்புவோர், தாங்கள் சேர விரும்பும் பாட முறை பிரவு ஆகியவற்றை கடிதப் போக்குவரத்தில் தெளிவாக மேற் புறத்தில் குறிப்பிடவேண்டும். இதனுல் விபரங்களைச் சுலபமாக அறியக் கூடியதாயிருக்கும்.

ஒரு விண்ணப்பக்காரர் ஒரு பாட முறையைத் தவிர தான் விரும்பும் வேறு பாடமுறைகளுக்கும் விண்ணப்பம் செய்துகொள்ளலாம். ஆனல் வெவ்வேறு விண்ணப்பப்பத்திரங்களில் விண்ணப்பிக்கவேண்டும்.

விண்ணப்பங்களில் ஒரு வருடத்திற்கும் அதற்குட்பட்ட பாட முறைகட் கும் ரூபா 1 பெறுமானமுள்ள முத்திரையும், ஒரு வருடத்திற்கு மேற் பட்ட பாடமுறைகட்கு ரூபா 2 பெறுமானமுள்ள முத்திரையும் ஒட்டி அவற்றின்மேல் விண்ணப்பக்காரரின் முதல் எழுத்தும் திகதியுமிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் கைநூல்களின் உதவியுடன், அவ்வப்பாட முறைகளுக்குரிய பத்திரங்களில் அவதானமாக, கைநூல்களில் கொடுக்கப் பட்டுள்ள அறிவுறுத்தற்கொப்ப நிரப்பி அனுப்பப்படவேண்டும்.

அரைகுறையாக அல்லது பிழையாக நிரப்பப்பட்ட, முத்திரையிடப் படாத, அவ்வப்பாட முறைகளுக்குக் குறிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங் களில் நிரப்பப்படாத விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டு அனு மதிக்கப்படமாட்டாது. ஒப்புக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்பத்திரங்கள் பிர வேசப் பரீட்சைக்கு முன் அறிவிக்கப்படும்.

கல்லூரியில் உட் பிரவேசித்தல் சம்பந்தப்பட்ட கடிதங்கள் யாவும் பதிவாளர், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி, கொழும்பு 10, என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

1959/60 ம் வருடம், 1959 ம் ஆண்டு ஆடி (ஜூலை) மாதம் 7 ந் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

**பாடமுறை விபரங்கள்.**

**பொறி இயல்.**—கட்டிட அமைப்புப் பயிற்சி—மூன்று வருடகால இடைநேரப்பயிற்சி (பகலில்).

**தொழில் விருத்திப் பகுதி.**

**முழுநேரப் பாடமுறை.**—மோட்டார் இயந்திரம் திருத்துதல்-ஒருவருடம்.

**சாயங்காலப் பாட முறைகள்.**

(i) அச்சுவேலை—மூன்று வருடம்.

(ii) மின்கம்பிக்காரர்கள் பாட முறை—ஒரு வருடம்.

(iii) ஒட்டுப்பயிலுதல்—ஒரு வருடம்.

எல். எச். சுமணதாச,
தற்காலிய பதிவாளர்.

கொழும்பு 10,
1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ந் திகதி.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### கல்விப்பகுதி

கீழ்க் குறிப்பிடப்படும் பாடசாலை சம்பந்தமாக கேள்விப்பத்திரங்கள் கல்வி அமைச்சு கேள்விச் சபை அக்கிராசனர் அவர்களால் 1959 ம் ஆண்டு தை மாதம் 2 ந் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் |
|---|---|
| திரி/திரிகோணமலை ஆரம்ப பாடசாலை .. | பாடசாலை கட்டல்–ஐந்து வகுப்பு அறைகளுடன் களஞ்சிய அறையும், காரியாலயமும், ஐந்து வகுப்பறைகள் மட்டும்; ஆசிரியர் விடுதி; ஒரு கிணறு, இரண்டு மலகூடம். |

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கல்வி இலாகாவி னுலும் பகிரங்க வேலை இலாகாவினுலும் பதிவு செய்யப்பட்ட கொந்தி ருத்துக்காரர்களுக்கு மாத்திரமே வழங்கப்படும். மேலே குறிப்பிட்ட வேலைக்கு கல்வி இலாகாவில் 32,500 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் அல்லது பகிரங்க வேலை இலாகாவில் 65,000 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கும் (A.C.) கீழே கல்விக்கந்தோரிலோ அல்லது வெளியூராகில் அப்பகுதிக் கச்சேரியிலோ ரூபா 100 பிணைப்பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச் சீட்டை கீழ்மாகாண கல்வி அதிகாரி அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ந் திகதி பிற்பகல் 3.30 மணி வரையுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். செக்குகள், போஸ்ரல் ஓடர்கள், மணி ஓடர்கள் முதலியன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

3. கேள்விப்பத்திரங்களுக்கு பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரம் கீழ் மாகாண கல்வி அதிகாரி அவர்களிடமிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப் பட்டதாக அத்தாட்சி சமர்ப்பித்தவர்களுக்கு மாத்திரமே பிணைப்பணம் கட்டும் உத்தரவுப் பத்திரம் வழங்கப்படும்.

4. இவ்வேலைகளுக்கு 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட பிரகாரம் கீழ்மாகாண கல்வி அதிகாரி அவர்களிடம் பெறக்கூடிய கேள்விப்பத்தி ரங்கள் இரட்டைப் பிரதியில் பதிவு செய்த தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். பதிவு செய்த தபால் மூலம் அனுப்ப விரும்பாத உள்நாட்டு விண்ணப்பக்காரர் நேரிலோ அல்லது தங்கள் பிரதிநிதிமூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப் பத்திரங்களை கல்வி அமைச்சின் காரியாலய உதவியாளரிடம் சேர்த்து அவைகளைப் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சி யாக அவரிடம் கடிதம் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப்பத் திரங்கள் அனுப்பும் உறைகளின் மீது வேலையின் விபரங்களும் விண்ணப்பக்காரரின் பெயரும் விலாசமும் எழுதப்பட வேண்டும். கீழ்மாகாண கல்வி அலுவலகத்தில் இவ்வேலைகளுக்குரிய படங்களும் மற்றும் விபரங்களும் பார்வையிடலாம்.

5. 1959 ம் ஆண்டு தை மாதம் 2 ந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விண்ணப்பப் பத்திரங்கள் பரிசீலனை செய்யப்படும். கேள்விப்பத்திரங் களைத் திறந்து பார்வையிடும்பொழுது விண்ணப்பக்காரர்கள் பிரசன்ன மாயிருக்க அனுமதிக்கப்படுவர். பிரசன்னமாயிருக்கும் விண்ணப்பக் காரர்களுக்கு விண்ணப்பத் தொகைகளும் விண்ணப்பக்காரர்களின் பெயர்களும் வாசித்துக் காட்டப்படும்.

6. விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து ஆறு வாரங்கள் வரை யிலுமே விண்ணப்பங்கள் செல்லுபடியாக இருக்கும்.

7. இலங்கையரும் குறிப்பிட்ட வேலை நடக்கும் பிரதேசத்தில் வசிப்ப வருமான வேலையாட்களையே வேலைக்கு அமர்த்தவேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகச் சேர்க்கப்படும். தெரிவு செய்யப்பட்ட

விண்ணப்பக்காரர் இந்த நிபந்தனையின்படி ஒழுகத் தவறினால் அத் தவறு ஒப்பந்த ஷரத்துகளை மீறியதாகக் கணிக்கப்பட்டு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படவும் கூடும். எனினும் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் கல்வி அதிபர் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் சம்மதத்துடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் இலங்கையரல்லாத வேலையாட்களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ அமர்த்துவதற்கு அனுமதி அளிப்பர். இந்த அனுமதி இல்லாமல் இலங்கையரல்லாத வேலையாட்களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ வேலைக்கமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

சி. தணிகாசலம்,
பதில் கல்வி அதிகாரி, கீ. மா.

கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு,
1958 ம் ஆண்டு டிசெம்பர் மீ 6 ந உ.

---

## வித்தியா பகுதி

கீழ்க்குறிக்கப்படும் பாடசாலை வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1959 ம் ஆண்டு தை மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணி வரை கொழும்பு 2, மலே வீதி, முதல் மாடியில் உள்ள வித்தியாபகுதிக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் |
|---|---|
| 1. யா/யாழ்ப்பாணம் அரசினர் சிங்கள கலவன் பாடசாலை .. | விஞ்ஞான அறைக் கட்டிடம் அமைத்தல் |
| 2. வ/வவுனியா அரசினர் சிரேஷ்ட பாடசாலை .. | விஞ்ஞான அறைக் கட்டிடம் அமைத்தல் |
| 3. மன்/மன்னார் அரசினர் சிரேஷ்ட பாடசாலை .. | விஞ்ஞான அறைக் கட்டிடம் அமைத்தல் |

யா : யாழ்ப்பாணப் பகுதி
வ : வவுனியாப் பகுதி
மன் : மன்னார் பகுதி

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் வித்தியா பகுதியில் ரூபா. 20,000 க்கும் அதற்கு மேலும் பதியப்பட்டவர்களுக்கும், பகிரங்க மராமத்து இலாகாவில் ரூபா 40,000 க்கும் அதற்கு மேல் பதியப்பட்டவர்களுக்கும் வேலைகள் ஒவ்வொன்றுக்கும் கீழ் (AC) வித்தியாபகுதி, கொழும்பிலோ அல்லது வெளியூராகில் அப்பகுதிக் கச்சேரியிலோ ரூபா. 100 கட்டுக்காசு கட்டியதாகப் பற்றுச்சீட்டு வடமாகாண வித்தியாதிகாரியிடம் சமர்ப்பித்தால் 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி வரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். காசோலை, மணியோடர், போஸ்டல் ஓடர் முதலியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. கேள்விப்பத்திரங்களுக்கான காசு கட்டுவதற்குரிய பத்திரங்கள் வடமாகாண வித்தியாதிகாரியிடம் பெறவேண்டும். இரண்டாம் பந்தியில் குறிப்பிட்டபடி பதியப்பட்டதாக அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கே காசு கட்ட உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்படும்.

4. விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பப் பத்திரத்தின் 9 ம் பந்தியைக் கவனிக்கவும். இலங்கைத் தொழிலாளர்கள் மாத்திரம் வேலைக் கமர்த்தப்படல் வேண்டும்.

5. இரண்டாம் பந்தியில் சொல்லப்பட்டபடி வடமாகாண வித்தியாதிகாரியிடம் இருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் தபால் மூலம் அனுப்புவதாயின் பதிவு செய்து அனுப்ப வேண்டும். இவ்வேலைகளுக்கான படங்களும் மற்றும் விபரங்களும் வடமாகாண வித்தியாதிகாரியிடம் இருந்து அறிந்து கொள்ளலாம். தபால் மூலம் அனுப்புபவர்கள், தலைவர், கேள்விச் சபை, வித்தியாபகுதி, மலாய் வீதி கொழும்பு 2, என்று விலாசமிட்டு அனுப்பவேண்டும். என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் வேலை விபரமும் விண்ணப்பிப்பவரின் பெயர், விலாசமும் எழுதப்படல் வேண்டும். நேரில் சமர்ப்பிப்பவர்கள் கொழும்பு வித்தியாபகுதியிலுள்ள வித்தியாதிபதியின் உதவியாளரிடம் கொடுத்து பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

6. 2.1.59 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு விண்ணப்பப் பத்திரங்கள் கொழும்பு 2, மலே வீதியிலுள்ள வித்தியாபகுதியில் பரிசீலனை செய்யப்படும். அப்பொழுது ஒப்பந்தக்காரர்கள் பிரசன்னமாயிருக்கலாம். அவர்களுக்கு விண்ணப்பங்களின் தொகையும் வாசித்துக் காட்டப்படும்.

7. விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து 6 வார காலத்திற்கு விண்ணப்பங்கள் செல்லுபடியாக இருக்கும். இவ்வேலைகளுக்கான சகல விபரங்களும் வடமாகாண வித்தியாதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

சி. உ. சோமசேகரம்,
வித்தியாதிகாரி,
வ. மா.

வித்தியாகந்தோர்,
யாழ்ப்பாணம்,
1958 ம் ஆண்டு மார்கழி மீ 8 ந உ.

## வவுனியா மாவட்ட பகுதியில் சிறிய நீர்ப்பாசன வேலைகளுக்கான கேள்விப் பத்திரம்

கீழே குறிக்கப்பட்ட குளங்களில் பற்கத்தை வைக்கும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரவர்களால் 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கறுவேப்பன்குளம்
2. பட்டகாட்டுக்குளம்

2. வவுனியா கச்சேரியில் உள்ள நீர்ப்பாசன பகுதியில் இருந்து 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் சமர்ப்பிக்கும் பொழுது வவுனியா அரசாங்க அதிபர் அவர்கள் பேரில் ரூபா 25 கச்சேரியில் கட்டியதற்கான பற்றுச்சீட்டு இணைத்தல் வேண்டும்.

3. மற்றும் விபரங்கள் வவுனியா கச்சேரியில் உள்ள நீர்ப்பாசன பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

டி. எம். எஸ். பெல்டவின்,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

வவுனியாக் கச்சேரி,
1958 ம் ஆண்டு டிசம்பர் மீ 2 ந உ.

---

**1. 10. 58 தொடக்கம் 30. 9. 59 வரை மன்னார் புகையிரத நிலையத்திலிருந்து மன்னார் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலைக்கும், பண்டகசாலையிலிருந்து அப்பண்டகசாலையால் விநியோகிக்கப்படும் பாடசாலைகளுக்கும் பாலுணவு கொண்டு செல்வதற்கான கேள்விப்பத்திரங்கள்.**

மேற் குறிப்பிட்ட சேவைக்குக் கீழ்க்காண்போர் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தனர் :—

1. திரு. கே. கே. வயித்திலிங்கம், உப்புக்குளம், மன்னார்.
2. திரு. என். எம். சரவணமுத்து, 23, கிறுன் வீதி, நீர்கொழும்பு.
3. திரு. எம். கே. மாணிக்கராசா, பெரியகடை, மன்னார்.

2. திரு. எம். கே. மாணிக்கராசாவால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர் குறிப்பிட்ட கூலி விபரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| புகைவண்டிப் பெட்டிகளிலிருந்து பாலுணவினை இறக்கி, லொறிகளில்/வண்டிகளில் ஏற்றி மன்னார் புகையிரத நிலையத்திலிருந்து மன்னார் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலைக்குக் கொண்டு சென்று இறக்கி அடுக்குதல்–ஒரு அந்தருக்கு .. | 35 சதம் |
| மன்னார் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலையிலிருந்து அப்பண்டகசாலையால் பாலுணவு விநியோகிக்கப்படும் பாடசாலைகட்குக் கொண்டு செல்தல் (ஏற்றுதல், இறக்குதல், கூலிகள் மூலம் கொண்டு செல்தல உட்பட) ஒரு அந்தருக்கு | ரூ. 3 10 சதம் |

சீ. லுடிக்கின்ஸ்,
உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரி,
மன்னார் மாவட்டம்.

மன்னார்க் கச்சேரி,
1958 ம் ஆண்டு நெவம்பர் மீ 20 ந உ.

---

**1. 10. 58 தொடக்கம் 30. 9. 59 வரை முருங்கன் புகையிரத நிலையத்திலிருந்து முருங்கன் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலைக்கும், பண்டகசாலையிலிருந்து அப் பண்டகசாலையால் விநியோகிக்கப்படும் பாடசாலைகளுக்கும் பாலுணவு கொண்டு செல்வதற்கான கேள்விப் பத்திரங்கள்**

மேற்குறிப்பிட்ட சேவைக்குக் கீழ்க்காண்போர் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்தனர் :—

1. திரு. கே. கே. வயித்திலிங்கம், உப்புக்குளம், மன்னார்.
2. திரு. என். எம். சரவணமுத்து, 23, கிறுன் வீதி, நீர்கொழும்பு.
3. திரு. எம். கே. மாணிக்கராசா, பெரியகடை, மன்னார்.

2. திரு. எம். கே. மாணிக்கராசாவால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர் குறிப்பிட்ட கூலி பின்வருமாறு :—

புகைவண்டிப் பெட்டியிலிருந்து பாலுணவினை இறக்கி, லொறிகளில்/வண்டிகளில் ஏற்றி முருங்கன்

| | |
|---|---|
| புகையிரத நிலயத்திலிருந்து முருங்கன் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலைக்குக் கொண்டு சென்று அடுக்குதல்–அந்தருக்கு .. | 38 சதம் |
| முருங்கன் உணவுக் கட்டுப்பாட்டுப் பண்டகசாலையிலிருந்து அப்பண்டகசாலையால் பாலுணவு விநியோகிக்கப் படும் பாடசாலைகளுக்குக் கொண்டு செல்லுதல் (ஏற்றுதல், இறக்குதல் கூலியாள் மூலம் கொண்டு செல்தல் உட்பட)–அந்தருக்கு | ரூ. 3 85 சதம் |

சீ. லுடிக்கின்ஸ்,
உப உணவுக் கட்டுப்பாட்டதிகாரி,
மன்னார் மாவட்டம்.

மன்னார்க் கச்சேரி,
1958 ம் ஞு நவம்பர் மீ 20 ந் உ.

# பொருட்கள் ஏலவிற்பனை

## வெந்தீஸ் விற்பனை

1958 ம் வருடம் டிசம்பர் மாதம் 19 ம் திகதி காலை 10.30 மணிக்கு டீ சேரம் பிளேசில் இருக்கும் மேகரோக தடுப்பு இயக்கக் காரியாலயத்தில் "லாண் ரோவர்" CN 2492 வெந்தீசில் விற்பனை செய்யப்படும். விற்பனை முடிந்த உடனடியாக பணத்தை செலுத்தி வாகனத்தை எடுத்துச் சென்றுவிடல் வேண்டும். காசோலை ஏற்கப்படமாட்டாது.

இவ்வாகனத்தை மேற்குறித்த இடத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணியளவில் எந்த நாட்களிலும் பார்வையிடலாம்.

இ. டி. சி. பெரேரா,
அத்தியட்சர்,
மேகரோக தடுப்பு இயக்கம்.

டீ சேரம் பிளேஸ்,
கொழும்பு,
1958 ம் ஞு டிசெம்பர் மீ 5 ந் உ.

# விளம்பரம்

1958 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 25 ந் திகதி வியாழக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக விருப்பதால், 1958 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 26 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1958 ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 22 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப் படுகின்றது.

பேர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1958 ம் ஞு மார்கழி (டிசெம்பர்) மீ 6 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.